செய்தி வெளியீடு எண்: 457 நாள் : 17.09.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.9.2015 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் 5 ஆண்டு காலம் தொடர்ந்து பணிபுரிந்த 8184 பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து காலமுறை ஊதியத்திற்கான ஆணையினை வழங்கும் அடையாளமாக 3 பணியாளர்களுக்கு ஆணைகளை வழங்கினார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் 5 ஆண்டுகளுக்கு மேலாக 8,184 பணியாளர்கள் தினக் கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் நீண்ட காலமாக தங்களுடைய வாழ்வாதாரத்தை சீரமைத்திட தங்கள் பணியினை ஊதிய விகித அடிப்படையில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தினக் கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களது பணி வரன்முறை செய்யப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.8.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் 5 ஆண்டு காலம் (31.7.2014 அன்றுடன்) தொடர்ந்து பணிபுரிந்த 8184 பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து காலமுறை ஊதியத்திற்கான ஆணையினை வழங்கிடும் அடையாளமாக 3 பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். காமராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. சண்முகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்

முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 17.9.2015